## எண்ணியல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - தநாஅபு பயிற்சி 1.2 - 6-10

6. சுலைமான் 3.350 கி.கி உருளைக்கிழங்கு, 2.250 கி.கி தக்காளி மற்றும் வெங்காயம் வாங்குகிறார். மொத்தப் பொருட்களின் எடை 10.250 கி.கி எனில், வெங்காயத்தின் எடை எவ்வளவு?

சுலைமான் வாங்கிய வெங்காயத்தின் எடையை $x$ எனக் கொள்க.

(உருளைக் கிழங்கு, தக்காளி, வெங்காயம்)

$10.250 \overset{①}{=} 3.350 + 2.250 + x$

$10.250 = 5.600 + x$

$x + 5.600 = 10.250$

$x \overset{②}{=} 10.250 - 5.600 = 4.650$ கி.கி

① 3.350 + 2.250 = 5.600

② 10.250 - 5.600 = 4.650

∴ சுலைமான் வாங்கிய வெங்காயத்தின் எடை **4.650** கி.கி

7. 0.713 ஐப் பெறுவதற்கு 7.1 இலிருந்து எவ்வளவைக் கழிக்க வேண்டும்?

கழிக்க வேண்டிய எண்ணை $x$ எனக் கொள்க.

$7.1 - x = 0.713$

$-x = 0.713 - 7.1$

இருபுறமும் (-1) - ஆல் பெருக்க.

$x \overset{①}{=} -0.713 + 7.1$

$x = 6.387$

① 7.100 -0.713 = 6.387

0.713 ஐப் பெறுவதற்கு 7.1 இலிருந்து **6.387** - ஐக் கழிக்க வேண்டும்.

8. 53.7 கிலோமீட்டரை விட 35.6 கி.மீ எவ்வளவு குறைவாக உள்ளது?

இரு எண்களை கழித்தல் ▶▶ விடை பகர்தல்

குறைவாக உள்ள மதிப்பை $x$ எனக் கொள்க.

$53.7 - x = 35.6$

$-x = 35.6 - 53.7$

இருபுறமும் (-1) - ஆல் பெருக்க.

$x \overset{①}{=} -35.6 + 53.7$

$x = 18.1$

① 53.7 -35.6 = 18.1

∴ 53.7 கிலோமீட்டரை விட 35.6 கி.மீ **18.1 கி.மீ** குறைவாக உள்ளது.

9. அகிலன் வடிவியல் பெட்டியை ₹25.75 இக்கும், பென்சிலை ₹3.75 இக்கும், பேனாவை ₹17.90 இக்கும் வாங்குகிறான். கடைக்காரரிடம் ₹50 ஐக் கொடுக்கிறான் எனில், அவன் திரும்பப் பெறும் தொகை எவ்வளவு?

∴ அகிலன் வாங்கிய பொருட்களின் மொத்த விலை $\overset{①}{=}$ 25.75 (வடிவியல் பெட்டி) + 3.75 (பென்சில்) + 17.90 (பேனா) = ₹47.40


அகிலன் கடைக்காரரிடம் ₹50 கொடுக்கிறான் எனில், அவன் திரும்பப் பெறும் தொகை (மீதி) $\overset{②}{=}$ 50 – 47.40 = ₹2.60

① 25.75 + 3.75 + 17.90 = 47.40

② 50.0 -47.40 = 2.60

∴ அகிலன் திரும்பப் பெறும் தொகை **₹2.60** ஆகும்.

10. 3.8 செ.மீ பக்க அளவைக் கொண்ட சமபக்க முக்கோணத்தின் சுற்றளவைக் காண்க?




முக்கோணத்தின் சுற்றளவு காணும் சூத்திரம் = பக்கம்$_1$ ($S_1$) + பக்கம்$_2$ ($S_2$) + பக்கம்$_3$ ($S_3$)

$\overset{①}{=}$ 3.8 + 3.8 + 3.8 = 11.4 செ.மீ

① 3.8 + 3.8 + 3.8 = 11.4

∴ கொடுக்கப்பட்டுள்ள சமபக்க முக்கோணத்தின் சுற்றளவு **11.4 செ.மீ** ஆகும்.

### இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/PrKctZ6fi_A


### Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 31st October, 2022 :: 06:27 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted**. However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited**.